# பிரித்தானிய தமிழர் பேரவை




**நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து எமது தமிழீழ தேசத்தை விடுதலை செய்து அதன் கீர்த்தியையும் பெருமையையும் சர்வதேச அரங்கில் பறைசாற்றுவோம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் எப்போது எதற்காக செயற்பட ஆரம்பித்தோம் ?


தமிழ் மக்களின் தாயகம்,தேசியம், தன்னாட்சி மற்றும் சுயநிர்ணயம் ஆகியவற்றை அடைவதற்கும், அதற்கான போராட்டத்தை பாதுகாப்பதற்கும் முன்னகர்த்துவதற்குமாக உயர் மட்ட இராஜதந்திரத்தை மேற்கொள்ளுதல், பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுதல் மற்றும் பிரித்தானிய தமிழ் மக்களை அணிதிரட்டுதல் ஆகிய பணிகளை பிரித்தானியாவில் முன்னெடுப்பதற்காக தாயக மக்களின் விருப்பத்துடனும் ஆசீர்வாதத்துடனும் 2006 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பிரித்தானிய தமிழர் பேரவையானது ஸ்தாபிக்கப்பட்டது.



## நாம் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளோம் ?

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட முன்னெடுப்பிற்கு உயர் மட்டஇராஜதந்திர செயற்பாடுகள் எந்தளவு அவசியமோ, அதேயளவு அவசியம் அதனை அடைவதற்காக சாதாரண மக்கள் மத்தியில் செயற்படுவதுமாகும் என்று பேரவையின் ஸ்தாபகர்கள் உணர்ந்தார்கள். இதனை கருத்தில் கொண்டே, பிரித்தானிய தமிழர் பேரவையானது, "பங்குபற்றல் ஜனநாயக" அடிப்படையில் "கீழ் மட்டத்திலிருந்தான மேல்மட்ட"( bottom - to - top ) கட்டமைப்பாக அனைத்து மக்களும் பங்கெடுக்கக் கூடியவகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தற்போது, பிரித்தானிய தமிழர் பேரவையானது, பிரித்தானியா முழுவதிலும் 22 உள்ளூர் பேரவைகளை கொண்டிருக்கிறது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுக்கக் கூடிய வகையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அவர்களைக் கொண்டே ஜனநாயக அடிப்படையில் அங்கு செயற்படுவதற்காக இந்த உள்ளூர் பேரவைகளுக்காக செயற்பாட்டாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இது ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்படுகிறது. பேரவையினால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பெரும்பான்மையான அதன் உறுப்பினர்களின் கருத்துக்களே ஆகும். அத்துடன், உள்ளூர் கூட்டங்கள் மற்றும் செயற்பாடுகளில் கலந்து கொள்வதன் மூலம் உறுப்பினர்கள் பிரித்தானிய தமிழர் பேரவையின் மூலோபாய வகுப்பு நடவடிக்கைகளில் கலந்து கொண்டு தமது பங்களிப்பை வழங்க முடியும்.




வட மேற்கு பிராந்திய தமிழர் பேரவைக்கான ஒரு உதாரணம் இங்கு விளக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் என்ன செய்கிறோம் ?

தாயகத்தில் தமிழ் மக்களின் துயரங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் சுதந்திரம் மற்றும் சுய நிர்ணய உரிமை ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்கும் நாம் பல்வேறுபட்ட அரசியல் மற்றும் இராஜதந்திர செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் பல்வேறுவிதமான உபாயங்களையும் மேற்கொண்டு வருகிறோம்.

எமது பிரதானமான செயற்பாடுகளில் சில கீழ்வருமாறு:

1.சர்வேதேச சமூகம் மத்தியில் இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அரசியல் பரப்புரைகளை மேற்கொள்ளுதல்.

2.எமக்கு ஆதரவாக இருக்கும் வகையில் பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய கொள்கைகளை ஆதிக்கம் செய்யும் வகையில் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் ஆதரவு தேடுதல்.

3.தாயகத்தில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக பிரசாரம் செய்தல்.






4. பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் மொழி மற்றும் கலாசாரம் ஆகியவற்றை மேம்படுத்துதலும் வளர்த்தலும்.

5. தாயகத்தில் வாழும் தமிழ் மக்களுக்கான வலுவூட்டல், புனர்வாழ்வு, புனரமைப்பு, புனர்நிர்மானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் செயற்திட்டங்களை முன்னெடுத்தல்.

6. தாயகம்,தேசியம், தன்னாட்சி மற்றும் சுயநிர்ணயம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் போராட்டத்தினை பாதுகாக்கவும் முன்னகர்த்தவும் அது பற்றி பிரசாரம் செய்யவுமான ஆய்வுகள் மற்றும் வெளியீடுகளை மேற்கொள்ளுதல்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் யார் யாருடன் பணியாற்றுகிறோம் ?

தாயகத்தில் மக்களின் போராட்டம் மற்றும் அங்கு வாழும் தமிழ் மக்களின் நல்வாழ்வில் அக்கறை உள்ள பிரித்தானியாவில் சகல கட்சிகளிலும் இருந்தான பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பான "சர்வ கட்சி பாராளுமன்ற குழுவுடன்" (All-Party Parliamentary Group for Tamils) மிக நெருக்கமாக செயற்படுகிறது. இந்த சர்வ கட்சி பாராளுமன்ற குழுவுடன் இணைந்து பிரித்தானிய தமிழர் பேரவை மகாநாடுகள், கண்காட்சிகள் என்று பல்வேறு அரசியல் திட்டங்களை முன்னெடுத்திருக்கிறது.


Lee Scott MP



Siobhain McDonagh MP


Robert Halfon MP


Gareth Thomas MP

பிரித்தானிய அரசியல் கட்சிகளின் ஆதரவு அமைப்புக்களான "தொழிற் கட்சிக்கான தமிழர்கள்" (Tamils for Labour) "பழைமைவாத கட்சிக்கான தமிழர்கள்" (Tamils Conservatives), "தாராள ஜனநாயகவாத கட்சிக்கான தமிழர்கள்" (Tamils for Liberal Democrats) ஆகியவற்றுடனும் மக்களுடனும் பிரித்தானிய தமிழர் பேரவை இணைந்து பணியாற்றி வருகிறது.






பிரித்தானியாவில் அரசியல்வாதிகளுடன் நான்கு மட்டங்களில் பிரித்தானிய தமிழர் பேரவையானது செயற்படுகிறது. அவையாவன:

1. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரபுக்கள்
2. ஐரோப்பிய பாராளுமன்ற பிரித்தானிய உறுப்பினர்கள்
3. உள்ளூர் கவுன்சிலர்கள், பாராளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தகுதிமிக்க வேட்பாளர்கள்.
4. இராஜதந்திரிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஐ.நா. அதிகாரிகள்

பிரித்தானிய தமிழர் பேரவையானது தொழிற் சங்கங்கள், கூட்டொருமைப்பாட்டு குழுக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூக பணியாளர்கள், ஊடகத் துறையினர், தனிநபர்கள், உள்ளூர் அமைப்புக்கள், தொழில்துறை அமைப்புக்கள், மற்றும் பிரித்தானிய தமிழ் மக்களின் வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகியவற்றுடனும் இணைந்து பணியாற்றுவதுடன் அவற்றின் அறிவு, அனுபவம், அரசியல் மற்றும் உள்ளூர் தொடர்புகள் என்பவற்றையும் பெற்றுக்கொள்கிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் இதுவரை என்ன செய்திருக்கிறோம் ?

பிரித்தானிய தமிழர் பேரவையானது, 2006 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஆரம்பிக்கப்பட்ட உடனடியாகவே, தாயகத்தில் வாழும் சக தமிழ் உறவுகளுக்கான தாயகம்,தேசியம், தன்னாட்சி மற்றும் சுயநிர்ணயம் ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்கான போராட்டத்தினை முன்னகர்த்தி செல்லும்பொருட்டு பல்வேறுபட்ட முக்கியத்துவம்மிக்க அரசியல் மற்றும் இராஜதந்திர செயற்திட்டங்களை முன்னெடுத்தது.

பிரித்தனியாவின் சகல தமிழ் மக்களினதும் பங்குபற்றுதலை அதிகரிக்கும் பொருட்டும் ஒரு ஜனநாயக குரலாக பரிணமிக்கும் பொருட்டும் 2008 ஆம் ஆண்டு பங்குனி மாதம் பிரித்தானிய தமிழர் பேரவையானது அங்கத்துவ அடிப்படையிலான அமைப்பாக மாற்றப்பட்டது.

2008/2009 காலப்பகுதில் தாயகத்தில் யுத்தம் தீவிரமாக இருந்த போது, பிரித்தானிய தமிழர் பேரவையானது ராஜதந்திர கலந்துரையாடல்கள் முதல் வெகுஜன ஆர்ப்பாட்டங்கள் வரை பல்வேறுபட்ட அகிம்சை முறையிலான செயற்பாடுகளை முன்னெடுத்தது. குறிப்பாக, 2009 ஆம் ஆண்டு பங்குனி, சித்திரை மற்றும் வைகாசி மாதங்களில் பிரித்தானிய தமிழர் பேரவை லண்டன் மத்திய பகுதிகளில் தொடர்ச்சியான ஆர்ப்பாட்ட பேரணிகளை நடத்தியது. இதில், சுமார் 2 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர்.

### எம்மால் முன்னெடுக்கப்பட்ட சில முக்கியமான செயற்பாடுகளை மட்டும் கீழே கால ஒழுங்கில் குறிப்பிடுகிறோம்.

சிறி லங்கா அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகியமையை ஆட்சேபித்து 2008 தை மாதம், பிரித்தானிய தமிழர் பேரவையானது சிறி லங்கன் ஏயர் லைன்ஸ் சேவையை புறக்கணிக்க கோரியும் வர்த்தக மற்றும் பிரயாண தடை விதிக்க வலியுறுத்தியும் ஒரு பிரசாரத்தை மேற்கொண்டது.





லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் மெதொடிஸ்ட் நிலைய மண்டபத்தில் 2008 மாசி மாதம் "தமிழர்களுக்கு எதிரான 60 வருடகால இனப்படுகொலை நடவடிக்கை" என்ற புகைப்பட கண்காட்சி நடத்தப்பட்டது. இதனை பெருமளவிலான பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரபுக்களும் பார்வையிட்டனர்.



2008 ஆம் ஆண்டுக்கான "சிறந்த பிரசார அமைப்புக்கான" ஆசிய குரல்" விருதினை பிரித்தானிய தமிழர் பேரவை பெற்றுக்கொண்டது.

இந்த விருது வழங்கும் வைபவம், 14 மாசி 2008 அன்று பிரித்தானிய பாராளுமன்ற பொதுச்சபையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர்.

பிரித்தானியாவின் அப்போதைய உள்விவகார அமைச்சர் கலாநிதி ஜோன் ரெய்ட் இந்த விருதினை வழங்கினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் ஹரோவில் பிரித்தானிய தமிழர் பேரவை 19 ஆம் திகதி சித்திரை மாதம் 2008 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்த கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் லண்டன் நகர பிதா கென் லிவிங்ஸ்டன், தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தை ஆதரித்து அங்கு கலந்து கொண்டோர் மத்தியில் உரையாற்றினார்.



பிரித்தானியாவுக்கான சிறி லங்கா ஜனாதிபதி மஹிந்த ரா ஜபக்சவின் வருகையை எதிர்த்து பொதுநலவாய அலுவலகத்தின் முன்பாக ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் 10 ஆனி 2008 அன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




பிரித்தானிய பாராளுமன்ற பொதுச்சபையில் 16 ஆடி 2008 அன்று “தமிழர்களுக்கு எதிரான 60 வருடகால இனப்படுகொலை நடவடிக்கை” என்ற புகைப்பட கண்காட்சி நடத்தப்பட்டது. இதனை பெருமளவான பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிட்டனர்.



கறுப்பு ஜூலை படுகொலைகளை நினைவு கூர்ந்து பாராளுமன்ற சதுக்கத்தில் 23 ஆடி 2008 அன்று பிரித்தானிய தமிழர் பேரவை, கவுன்சிலர்கள் சங்கத்துடன் இணைந்து “ மெழுகுதிரி அஞ்சலி” நிகழ்வினை நடத்தியது.




கறுப்பு ஜூலை படுகொலைகளை நினைவு கூர்ந்து பாராளுமன்ற சதுக்கத்தில் 23 ஆடி 2008 அன்று பிரித்தானிய தமிழர் பேரவை, கவுன்சிலர்கள் சங்கத்துடன் இணைந்து “மெழுகுதிரி அஞ்சலி” நிகழ்வினை நடத்தியது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத்தில் தமிழ் மக்களின் நிலைமை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு லண்டன் ஹரோவில் 17 புரட்டாதி 2008 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில், பிரித்தானியாவின் பிரதி வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அமைச்சர் மார்க் மல்லோச் பிரவுன் பிரபு அவர்கள் கலந்து கொண்டார். இந்த சந்திப்பில், பாராளுமன்ற உறுப்பினர்களான கரத் தோமஸ், கீத் வாஸ், லண்டனுக்கான ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர் றொபேர்ட் இவான்ஸ் மற்றும் தமிழ் கவுன்சிலர்களும் கலந்து கொண்டனர்.





வன்னியில் சிறி லங்கா அரசாங்கத்தின் இன அழிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 11 ஐப்பசி 2008 அன்று "நடையும் கதையும்" (Walking and Talking) என்ற பிரசார நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.





வன்னியில் அப்பாவி தமிழ் மக்கள் மீதான கண்மூடித்தனமான விமான மற்றும் எறிகணை தாக்குதல்களை நிறுத்துவதற்கான சர்வதேச தலையீட்டை வலியுறுத்தி பாராளுமன்றத்திற்கு வெளியே 1 ஐப்பசி 2008 அன்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் குறுகிய கால அறிவிப்பில் கலந்து கொண்டனர்.




புரட்டாசி 2008 இல் நடைபெற்ற தொழிற் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் பிரித்தானிய தமிழர் பேரவையின் சிரேஷ்ட உறுப்பினரான சென் கந்தையா முதன்மையான உரை ஆற்றியதுடன் அந்த உரையில் தமிழ் மக்களுக்கெதிரான சிங்கள அரசாங்கங்களின் 60 வருடகால இனப்படுகொலையை கண்டனம் செய்தார்.






சிறி லங்கா அரசாங்கத்தின் தமிழர்களுக்கு எதிரான 60 வருடகால இனப்படுகொலை செயற்பாடுகளை வெளிக்கொணரும் நோக்கில் "விபரிக்க முடியாத உண்மைகள்" (Unspeakable Truth) என்ற புத்தகத்தை ஐப்பசி 2008 இல் பிரித்தானிய தமிழர் பேரவை வெளியிட்டு உலகம் பூராக விநியோகம் செய்தது.

தமிழர்கள் மீதான இனப்படுகொலையை நிறுத்த வலியுறுத்தி 19 கார்த்திகை 2008 இல் பாராளுமன்ற சதுக்கத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வன்னியில் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்த கோரி சுமார் 1 இலட்சத்துக்கும் அதிகமான பிரித்தானிய மக்கள் 31 தை 2009 அன்று லண்டனில் பாரிய பேரணி ஒன்றை நடத்தினர்.



வன்னியில் சிறி லங்கா அரசின் வகை தொகையான தமிழர் படுகொலைகளை நிறுத்த வலியுறுத்தி நூறுக்கும் அதிகமான தமிழ் மக்கள் லண்டன் வீதிகளில் " கார் பவனி" ஆர்ப்பாட்டம் ஒன்றை 01 பங்குனி 2009 அன்று



சிறி லங்காவின் தமிழ் மக்கள மீதான யுத்தத்தை உடனடியாக நிறுத்த வலியுறுத்தி 05 பங்குனி 2009 அன்று மாபெரும் "மனித சங்கிலி" போராட்டம் ஒன்று லண்டன் வீதிகளில் நடத்தப்பட்டது.




பிரித்தானியாவின் சர்வ கட்சி பாராளுமன்ற குழு, பிரித்தானிய தமிழர் பேரவையுடன் இணைந்து 26 பங்குனி 2009 அன்று, " உலக தமிழர் அவை" என்ற சர்வதேச மகாநாட்டை லண்டனில் நடத்தியது. இந்த மகாநாட்டில், 21 நாடுகளில் இருந்து சுமார் 45 தமிழ் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



வன்னியில் தமிழ் மக்கள மீதான சிறி லங்கா அரசின் இனப்படுகொலை யுத்தத்தை நிறுத்த வலியுறுத்தி பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு முன்பாக 06 சித்திரை 2009 அன்று, உட்கார்ந்திருக்கும் போராட்டம் (Sit- in protest) ஒன்றை மேற்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியான யுத்த நிறுத்த உடன்படிக்கையை வலியுறுத்தி சுமார் 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் 11 சித்திரை 2009 அன்று லண்டன் வீதிகளில் நீண்ட பேரணி ஒன்றை மேற்கொண்டனர்.






லண்டன் தொகுதிக்கான சுயேட்சை வேட்பாளராக 4 ஆனி 2009 இல் நடைபெற்ற ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கான தேர்தலில் போட்டியிட்ட ஜனனி ஜனநாயகத்திற்கு பிரித்தானிய தமிழர் பேரவை ஆதரவான நடவடிக்கைகளை முன்னெடுத்தது.



தமிழ் மக்களுக்கு எதிராக சிறி லங்கா அரசாங்கம் வன்னியில் நடத்திய இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களை நினைவு கூர்ந்து 1 இலட்சத்துக்கும் அதிகமான பிரித்தானிய தமிழ் மக்கள் 20 ஆனி 2009 அன்று லண்டன் வீதிகளில் மாபெரும் பேரணி ஒன்றை நடத்தினர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதிலும் உள்ள புலம்பெயர் தமிழ் மக்கள் அமைப்புகளை ஒரே குடையின் கீழ் ஒன்று சேர்க்கும் வகையில் 23 ஆடி 2009 அன்று உலக தமிழர் பேரவையை உருவாக்குவதற்கு பிரித்தானிய தமிழர் பேரவை அடித்தளத்தை அமைத்ததுடன் அதன் வளர்ச்சிக்கும் செயற்பாடுகளுக்கும் முதன்மையானதும் அவசியமானதுமான பங்களிப்பை வழங்கியது.

**Global Tamil Forum**
**உலகத் தமிழர் பேரவை**


கறுப்பு ஜூலை தமிழ் இன படுகொலைகளை நினைவுகூரும் வகையில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் லண்டன் ரவல்கர் சதுக்கத்தில் 26 ஆடி 2009 அன்று அணிதிரண்டனர்.




தடுப்பு முகாம்களில் உள்ள தமிழ் மக்களை விடுவிக்கக் கோரி 28 ஆவணி 2009 அன்று பிரித்தானிய தமிழர் பேரவை " திறப்பு பிரசாரம்" (Key Campaign) ஒன்றை ஆரம்பித்தது.



பிரான்சில் 28 ஆவணி 2009 அன்று நடைபெற்ற உலக தமிழர் பேரவையின் முதலாவது மகாநாட்டில் பிரித்தானிய தமிழர் பேரவை மிகவும் முக்கியமானதும் காத்திரமானதுமான பங்களிப்பை வழங்கியது.



லண்டனில் 1 ஐப்பசி 2009 இல் நடைபெற்ற பிரித்தானிய தொழிற்கட்சியின் மகாநாட்டில் சிறி லங்கா தொடர்பில் அவசரகால தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு பிரித்தானிய தமிழர் பேரவை முக்கியமான பங்கினை வகித்திருந்தது.




பிரித்தானிய தமிழ் மக்கள் பிரித்தானியாவின் அப்போதைய நிழல் வெளிநாட்டமைச்சர் வில்லியம் ஹேக் 2 மாசி 2010 அன்று சந்தித்து சிறி லங்கா அரசாங்கத்தினால் தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களின் துன்ப நிலைமை குறித்து எடுத்துரைத்தனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐரோப்பிய ஆணைக்குழு 15 மாசி 2010 அன்று சிறி லங்காவுக்கெதிரான ஜி.எஸ்.பி பிளஸ் (GSP Plus) சலுகையினை இரத்து செய்வதற்கு, பிரித்தானிய தமிழர் பேரவை சிறி லங்கா அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தில் மேற்கொண்ட பிரசார நடவடிக்கைகளும் ஒரு காரணமாக அமைந்தது.
சிறி லங்காவின் ஆடை ஏற்றுமதி வர்த்தகத்தில் இது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.



பிரித்தானிய பாராளுமன்றத்தின் கிளாட்ஸ்டோன் மண்டபத்தில் 24 மாசி 2010 அன்று உலக தமிழர் பேரவையின் மகாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு பிரித்தானிய தமிழர் பேரவை முக்கிய காரணமாக அமைந்திருந்தது. உலகளாவிய ரீதியில் பெரிதும் பேசப்பட்ட இந்த மகாநாட்டுக்கான ஏற்பாட்டு நடவடிக்கைகளை பிரித்தானிய தமிழர் பேரவை செய்திருந்தது.






ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் லண்டன் ரவல்கர் சதுக்கத்தில் 18 வைகாசி 2010 அன்று ஒன்றுகூடி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையினை நினைவுகூர்ந்தனர். பெரும்ளவிலான பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் என்று பலர் இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறி லங்காவுக்கெதிரான போர்குற்றச்சாட்டு தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க ஐ. நா. செயலாளர் நாயகம் பான் கி மூனினால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவிற்கு சிறி லங்கா இராணுவத்தின் போர் குற்றங்கள்பற்றிய ஆதாரங்களை திரட்டும் "இனப்படுகொலை, போர் குற்ற ஆதார சேகரிப்பு நடவடிக்கை" ஒன்றை ஆனி- மார்கழி 2010 வரை பிரித்தானிய தமிழர் பேரவை தீவிரமாக முன்னெடுத்தது. இதன்போது, சேகரிக்கப்பட்ட ஆதாரங்களை நிபுணர் குழுவிடம் மார்கழி மாதம் பிரித்தானிய தமிழர் பேரவை சமர்ப்பித்தது.



பல்லாயிரக்கணக்கில் லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் அபே பகுதியில் 23 ஆடி 2010 இரவுப் பொழுதில் அணி திரண்ட பிரித்தானிய தமிழர்கள் ஆயிரக்கணக்கான தீப்பந்தங்களை ஏற்றி கறுப்பு ஜூலை இனப்படுகொலையை நினைவு கூர்ந்தனர்.




சிறி லங்காவின் வெளிநாட்டமைச்சர் ஜி.எல்.பிரீஸ் லண்டனின் உபாய கற்கைகளுக்கான நிலையத்தில் (The International Institute for Strategic Studies) 19 ஐப்பசி 2010 அன்று ஆற்றவிருந்த உரையை கண்டித்து பெருமளவிலான தமிழ் மக்கள் அந்த நிலையத்திற்கு வெளியே திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, பல்வேறு அரசியல் நிகழ்ச்சித்திட்டங்களுடன் லண்டன் வந்திருந்த சிறி லங்கா குழுவினருக்கெதிராக பிரித்தானிய தமிழர் பேரவை பல அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறி லங்கா இராணுவத்தினால் தடுப்பு முகாம்களில் எந்தவித குற்றச்சாட்டுக்களும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளின் பெயர் விபரங்களை சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் வழங்கவும், அவர்களை பார்வையிடுவதற்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கு அனுமதி வழங்கவும் வலியுறுத்தியும் தடுப்பு கைதிகள் மீது உரிய முறையில் வழக்கு தொடர வேண்டும் அல்லது அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தியும் 27 கார்த்திகை 2010 அன்று பிரித்தானிய தமிழர் பேரவை ஒரு

# Are They Alive ?

## Stop the world's largest detention becoming the world's largest disappearances!




போர்க்குற்றவாளியான சிறி லங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவை பிரித்தானியாவுக்குள் நுழைய அனுமதிக்கக்கூடாது என்றும் ஒக்ஸ்போர்ட் யூனியனில் அவர் ஆற்றவிருந்த உரையை இரத்துசெய்ய வலியுறுத்தியும் பிரித்தானிய தமிழர் பேரவை மார்கழி 2010 இல் லண்டனில் பாரிய மக்கள் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குசெய்தது. அத்துடன் பல சட்ட நடவடிக்கைகளையும் ராஜபக்ஸ குழுவினருக்கெதிராக ஒருங்கிணைத்திருந்தது. இறுதியில், ஒக்ஸ்போர்ட் யூனியன் ராஜபக்ஸவின் உரையை இரத்து செய்ததுடன் ராஜபக்ஸ பெரும் அவமானத்துடன் பிரித்தானியாவை விட்டு வெளியேற நேர்ந்தது.



சிறீ லங்காவின் சுதந்திரதின நினைவு நாளான 4 மாசி 2011 அன்று லண்டனில் உள்ள சிறி லங்காவின் தூதுவராலயத்தின் முன்பாக பெரும் எண்ணிக்கையில் அணிதிரண்ட தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.



சிறி லங்காவின் தமிழ் மக்களுக்கெதிரான இனப்படுகொலைகளை கண்டித்து 01 வைகாசி 2011 அன்றைய தொழிலாளர் தினத்தன்று நூற்றுக்கணக்கான பிரித்தானிய தமிழ் மக்கள் லண்டனில் பேரணிகளில் கலந்து கொண்டனர்.







முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து லண்டன் ரவல்கர் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் 18 வைகாசி 2011 அன்று அஞ்சலி நிகழ்வுகளில் பங்கேற்றனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய பாராளுமன்றத்தில் 01 ஆனி 2011 அன்று ஐரோப்பிய ஐக்கிய இடதுசாரி மற்றும் நோர்டிக் கிறீன் இடதுசாரி ஆகிய அமைப்புக்கள் ஒழுங்குசெய்திருந்த மகாநாட்டில் பிரித்தானிய தமிழர் பேரவை முக்கியமான பங்களிப்பை வழங்கியிருந்தது.





சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்தினால் 14 ஆனி 2011 அன்று ஒளிபரப்பப்பட்ட “சிறி லங்காவின் கொலைக்களம்” (Sri Lanka's Killing Fields) எனும் ஆவண படத்தினை பரர்க்குமாறு பிரித்தானிய பிரஜைகளை வலியுறுத்தும் ஆயிரக்கணக்கான துண்டுப்பிரசுரங்களை பிரித்தானிய தமிழர் பேரவையின் தொண்டர்கள் லண்டனின் பல்வேறு பகுதிகளில் விநியோகம் செய்தனர்.







பிரித்தானிய தமிழர் பேரவையின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இந்தியாவின் ஒரு பிரதான அரசியல் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் மூத்த உறுப்பினர்களை 17 ஆடி 2011 அன்று லண்டனில் சந்தித்து கலந்துரையாடினர். இந்த சந்திப்பில் பாரதிய ஜனதா சார்பில் அதன் தலைவர் நிதின் கர்காரி, அகில இந்திய பெண்கள் பிரிவு தலைவி சிம்ரிடி இராணி, மற்றும் ராஜஸ்தான் மாநில முன்னாள் முதலமைச்சர் வசுந்திரா ராஜி மற்றும் புதுடில்லி எம் எல் ஏ விஜய் ஜொலி ஆகியோர் கலந்து கொண்டனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவுக்கு ஆவணி 2011 இறுதி வாரத்தில் விஜயம் செய்த பிரித்தானிய தமிழர் பேரவையின் அரசியல் குழு ஒன்று புதுடில்லி, தமிழ் நாடு மற்றும் மாநிலங்களுக்கு பயணம் செய்து பல்வேறு அரசியல் கட்சிகளையும் பிரமுகர்களையும் சந்தித்து சிறி லங்காவுக்கெதிரான போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் சர்வதேசரீதியான சுயாதீன விசாரணையை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது குறித்து விரிவாக கலந்துரையாடியது.



லண்டன் டவுனிங் வீதியில் உள்ள பிரித்தானிய பிரதமரின் வாசஸ்தலம் முன்பாக 23 ஆடி 2011 அன்று ஒன்றுகூடிய பெருமளவான தமிழ் மக்கள் மெழுகுதிரி தீபம் ஏற்றி கறுப்பு ஜுலை தமிழ் இனப்படுகொலையை நினைவு கூர்ந்தனர். சிறி லங்கா அரசாங்கத்தின் இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விபரிக்கும் துண்டுப் பிரசுரங்களும் லண்டனின் பல பகுதிகளில் அன்றைய தினம் விநியோகிக்கப்பட்டது.



பேர்மின்ஹாம் முதல் லண்டன் டவுனிங் வீதி வரையில் 2-7 கார்த்திகை 2011 காலப்பகுதில் நடைபெற்ற " இதயத்திற்கு இதயம் " (Heart to Heart) என்ற 6 நாள் நடை பயணத்தில் பிரித்தானிய தமிழர் பேரவை கலந்து கொண்டு ஆதரவு வழங்கியது.



பிரித்தானிய பாராளுமன்றத்தில் தமிழர்களுக்கான சர்வ கட்சி பாராளுமன்ற குழுவுடன் இணைந்து பிரித்தானிய தமிழர் பேரவை நடத்திய சிறி லங்கா அரசாங்கத்தின் இனப்படுகொலை பற்றிய புகைப்பட கண்காட்சியினை பெருமளவான பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரபுக்கள் மற்றும் பிரதானிகள் பார்வையிட்டனர். இந்த கண்காட்சியில் சிறி லங்கா அரசின் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் பல நேரடியான சாட்சிகளும்



சிறி லங்காவின் சுதந்திர தின நினைவு நாளான 04 மாசி 2012 அன்று லண்டன் மாநகரின் பல பாகங்களிலும் பிரித்தானிய தமிழர் பேரவையின் தொண்டர்கள் சிறி லங்கா அரசின் தமிழ் இனப்படுகொலையினை விபரிக்கும் துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்தனர். இதேவளை, லண்டன் டவுனிங் வீதியில் உள்ள பிரித்தானிய








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் சிறி லங்கா மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 19 ஆவது கூட்டத்தொடரின்போது பிரித்தானிய தமிழர் பேரவையானது, கனடிய தமிழர் காங்கிரஸ், அமெரிக்க தமிழ் அரசியல் செயலவை, பிரித்தானிய தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் ஏனைய புலம் பெயர் தமிழ் அமைப்புக்களுடன் இணைந்து சிறி லங்கா அரசாங்கத்தின் போர்க்குற்ற மீறல்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து தீவிரமான தொடர் பிரச்சார நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தது. இதன்போது, சிறி லங்கா அரசின் தமிழ் இன படுகொலை தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பல ஆவணங்களை ராஜதந்திரிகள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு பிரித்தானிய தமிழர் பேரவை விநியோகித்திருந்தது.



பிரித்தானிய தமிழர் பேரவையின் உள்ளூர் பேரவைகள் பங்குனி மற்றும் சித்திரை ஆகிய மாதங்களில் மீளமைக்கப்பட்டு பல புதியவர்கள் உள்வாங்கப்பட்டு புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு 22 இற்கும் அதிகமான பேரவைகள் மீளமைக்கப்பட்டு புதிய உபாயங்களும் அணுகுமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனில் 1 வைகாசி 2012 அன்று நடைபெற்ற தொழிலாளர் தினத்தில் நூற்றுக்கணக்கான பிரித்தானிய தமிழ் மக்கள் கலந்து கொண்டு சிறி லங்கா அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் மற்றும் அடக்குமுறைகளை வெளிப்படுத்தி சென்றனர்.



லண்டன் ரவல்கர் சதுக்கத்தில் 19 வைகாசி 2012 அன்று நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு நினைவு கூரல் நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.




பிரித்தானிய மகாராணியின் வைர விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவும் லண்டனில் பொதுநலவாய பொருளாதார பேரவையில் உரையாற்றவும் பிரித்தானியா வருகைதந்திருந்த போர்க் குற்றவாளி சிறி லங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவை பொதுநலவாய பொருளாதார பேரவையில் உரையாற்ற அனுமதிக்கக்கூடாது என்று வலியுறுத்தியும் வைர விழா கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கக்கூடாது என்று வலியுறுத்தியும் பிரித்தானிய தமிழர் பேரவை ஆனி 2012 முதல் வாரத்தில் ஏற்பாடு செய்திருந்த தொடர் ஆர்ப்பாட்ட பேரணிகளில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் அணிதிரண்டிருந்தனர். இறுதியில், பொதுநலவாய பொருளாதார பேரவையில் ராஜபக்ஸ ஆற்றவிருந்த உரை இரத்து செய்யப்பட்டதுடன் அவர் பெரும் அவமானம் மற்றும் ஏமாற்றத்துடன் பிரித்தானியாவை விட்டு வெளியேறினார்.






ஜெனீவாவில் 2012 ஆனி மற்றும் ஆடி மாதங்களில் நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 20 ஆவது கூட்டத்தொடரின்போது பிரித்தானிய தமிழர் பேரவையின் மனித உரிமைகள் குழு ஆரம்பம் முதல் இறுதி வரை அங்கு தங்கி நின்று சிறி லங்கா அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து அங்கு வந்திருந்த சுமார் 192 உறுப்பு நாடுகளின் ராஜதந்திரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மத்தியில் தீவிர பிரச்சாரம் செய்ததுடன் பல புதிய தொடர்புகள் மற்றும் நட்புறவுகளையும் ஏற்படுத்தினர்.

அத்துடன் சிறி லங்கா அரசாங்கத்தின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பிலான புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் பல ஆவணங்களையும் ராஜதந்திரிகள், அரசியல்வாதிகள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு விநியோகம் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரித்தானிய பிரதமரின் வாசஸ்தலம் முன்பாக 23 ஆடி 2012 அன்று ஒன்றுகூடிய நூற்றுக்கணக்கான பிரித்தானிய தமிழ் மக்கள் கறுப்பு ஜுலை இனப்படுகொலையை நினைவு கூர்ந்ததுடன் மெழுகுதிரி தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். சிறி லங்கா அரசாங்கத்தின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விபரிக்கும் பதாகைகள் மற்றும் சுலோக அட்டைகளை இவர்கள் ஏந்தி நின்றனர்.

சிறி லங்கா அரசாங்கத்தின் இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான துண்டுப் பிரசுரங்களும் இதன்போது விநியோகிக்கப்பட்டதுடன் சுற்றுலா பயணிகள் மற்றும் பிரித்தானிய பிரஜைகளுக்கு தமிழ் மக்கள் போராட்டம் பற்றிய விளக்கமும் கொடுக்கப்பட்டது.




சிறி லங்காவில் 2013 இல் நடைபெற இருக்கும் பொதுநலவாய அமைப்பின் தலைவர்களின் உச்சி மகாநாட்டினை இரத்து செய்ய அல்லது அந்த மகா நாட்டினை புறக்கணிக்க கோரும் பிரசாரம் (Boycott CHOGM Campaign) ஒன்றினை பிரித்தானிய தமிழர் பேரவை ஏனைய புலம் பெயர் தமிழ் அமைப்புக்களுடன் இணைந்து ஆடி 2012 இல் ஆரம்பித்தது. சிறி லங்கா அரசாங்கம் தனக்கெதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் தன்மையை காட்டாதுவிட்டால் கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மகாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கனடிய பிரதமர் ஸ்ரீபன் கார்ப்பர் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்.



நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் 27 -29 ஆடி 2012 வரை நடைபெற்ற புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் ஒன்றுகூடலில் பிரித்தானிய தமிழர் பேரவை முக்கியமான பங்களிப்பை செய்திருந்தது. இந்த ஒன்று கூடலில் உலகம் முழுவதிலும் இருந்து 11 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கலந்து கொண்டிருந்தன. இதன்போது பல முக்கிய முடிவுகளும் பிரகடனங்களும் மேற்கொள்ளப்பட்டன.



பிரித்தானிய தமிழர் பேரவையின் தொண்டர்கள் 2012 ஐப்பசி மற்றும் புரட்டாதி மாதங்களில் லண்டனில் உள்ள ஈலிங் அம்மன், சிறி கற்பக விநாயகர் மற்றும் லுவிஸ்ஹாம் சிவன் ஆலயங்களின் தேர் திருவிழாக்களின் போது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பிலான சமகால அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடயங்கள் குறித்து அறிவூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானிய தமிழர் பேரவை தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் பரப்புரை நடவடிக்கைகளுக்காக ஆதரவு திரட்டும் வகையில் 25 ஆவணி 2012 அன்று லண்டன் எட்மொன்டனில்






## நீங்கள் எவ்வாறு பிரித்தானிய தமிழர் பேரவைக்கு உதவி செய்யலாம்?

தாயகத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு நீதி, விடுதலை, சுதந்திரம் மற்றும் சுயநிர்ணயம் ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு நாம் சாத்தியமான சகல வழிகளிலும் முயற்சிக்கிறோம். எம்மால் மட்டும் இதனை செய்து விட முடியாது, உங்களது ஆதரவும் ஒத்துழைப்பும் எமக்கு தேவை. எமது இலக்குகளை அடைவதற்கும் இந்த போராட்டத்தை முன்னெடுத்து செல்வதற்கும் உங்களது திறமைகள் மற்றும் ஆற்றல்கள் எமக்கு தேவைப்படுகிறது. எமது மக்களுக்கு உதவுவதற்கு நீங்கள் எமக்கு உதவுங்கள், எம்முடன் ஐக்கியப்படுங்கள்- நாம் வெற்றி பெறுவோம். கீழ்வரும் விடயங்களில் உங்களது ஆதரவு, பங்குபற்றுதல், வழிகாட்டல் மற்றும் ஆலோசனை ஆகியவற்றை எதிர்பார்க்கிறோம்.

### ஊடகம்



தாயகம்,தேசியம், தன்னாட்சி மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான தமிழ் மக்களின் போராட்டத்தை பாதுகாப்பதற்கும் அதனை முன்னகர்த்தி செல்வதற்கும் ஊடகமானது மிகவும் முக்கியமானதும் சக்திமிக்கதுமான கருவி ஆகும். எமது இலக்கு மற்றும் பணித்திட்டங்களை அடைவதற்கு நாம் ஊடகத்தில் பெரிதும் சார்ந்திருக்கிறோம். ஆகவே, எழுத்தாற்றல், அறிக்கையிடும் ஆற்றல் மற்றும் இலக்கண பிழை திருத்தும் ஆற்றல் போன்ற ஊடகவியல் ஆற்றல் உள்ளவர்களின் உதவி எமக்கு தேவைப்படுகிறது. எமது செய்தி வெளியீடுகளை நீங்கள் எழுதலாம் அத்துடன் உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு செய்தி மற்றும் கட்டுரைகளை எழுதலாம். எமது மாதாந்த செய்தி மடலை தயாரிப்பதற்கும் நீங்கள் உதவலாம்.

நீங்கள் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் புலமை உள்ளவராக இருந்தால் எமது அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளுக்கு உதவுவதுடன் மொழிபெயர்ப்பு வேலைகளுக்கும் உதவிசெய்யலாம்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுடன் இணைந்து பணியாற்றுமாறும் அவர்களுடன் நெருக்கமான உறவினை ஏற்படுத்திக்கொள்ளுமாறும் உங்களை நாம் வேண்டிக்கொள்கிறோம். எந்த வழியில் என்றாலும் உங்களுக்கு இது விடயங்களில் உதவி செய்வதற்கும் வழிகாட்டுவதற்கும் நாம் தயாராக இருக்கிறோம்.

தொடர்பு : சுதா மின்னஞ்சல்: admin@tamilsforum.com தொ.பே: 020 8808 0465

### மனித உரிமைகள்




அரசியல் கட்சிகள், மனித உரிமைகள் அமைப்புக்கள், ஐ.நா, அரச சார்பற்ற அமைப்புக்கள் , தோழமை அமைப்புக்கள், தொழில் சங்கங்கள், சமூக அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் என்று பல்வேறு தரப்பினருடன் எமது மனித உரிமைகள் குழு செயற்பட்டு வருகிறது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் 191 உறுப்பு நாடுகளுடன் நாம் பணியற்றிவருகிறோம். இதற்கு பல்வேறு மொழிகளை பேசக் கூடியவர்கள் , குறிப்பாக ஸ்பானிஸ், பிரெஞ்சு, யேர்மன் ஆகிய மொழிகளை பேசக் கூடியவர்கள் எமக்கு தேவைப்படுகிறார்கள். உலகின் எந்த நாடுகளில் என்றாலும் உங்களுக்கு தெரிந்தவர்கள் அரசியலில் அல்லது பிரதான கொள்கை வகுப்பு நிலையங்களில் இருந்தால் அவர்களுடனான உங்கள் உறவினை எமது தேசத்தின் விடுதலைக்காக பல வழிகளில் நீங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். தயவுசெய்து எம்முடன் இணைந்து பணியாற்றுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தொடர்பு: நிர்மலன் மின்னஞ்சல்: admin@tamilsforum.com தொ.பே: 020 8808 0465



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அணைவு தேடுதல் (Lobbying)




மிகக் குறுகிய காலத்தில் தாயகம், தேசியம், தன்னாட்சி மற்றும் சுயநிர்ணயம் ஆகியவற்றுக்கான எமது விடுதலைப் போராட்டத்தை பிரித்தானிய அரசியல்வாதிகளும் கொள்கை வகுப்பாளர்களும் ஆதரிக்கும் வகையிலும் புரிந்துகொள்ளும் வகையிலும் பல்வேறுபட்ட செயற்பாடுகளை பிரித்தானிய தமிழர் பேரவை முன்னெடுத்தது.

அரசியல் அணைவு தேடும் எமது குழுவின் உறுப்பினர்கள் மிகச்சிறந்த தொர்டர்பாடல் ஆற்றல் மற்றும் எமது போராட்டம் பற்றிய சிறந்த அறிவை கொண்டவர்கள். பிரித்தானிய அரசியல்வாதிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் எமது போராட்டத்திற்கு அணைவு தேடுவதற்கான பல வழிகள் உள்ளன. நீங்களும் இந்த பணியில் எம்முடன் இணைந்து கொள்ளலாம். எந்த வழியில் வேண்டுமானாலும் நாம் உங்களுக்கு உதவ தயாராக இருக்கிறோம்.

தொடர்பு: வாகீசன், வசி மின்னஞ்சல்: admin@tamilsforum.com தொ.பே: 020 8808 0465

## அரசியல் சார்பு தேடுதல் (Advocacy)



எமது விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச சமூகத்தின் சார்புத்தன்மையை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமானதாகவும் எமது பணித்திட்டங்களை உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் முன்னெடுத்து செல்வதன் பிரதான செயற்பாடகவும் இருக்கிறது. எமது உறுப்பினர்கள் பலர் கடந்த காலங்களில் தத்தமது பிரதேசங்களில் இந்த பணியை சிறந்த முறையில் செய்து ஏராளமான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை வென்றெடுத்துள்ளனர். இதன் காரணமாகவே , தமிழர்களுக்கான சர்வ கட்சி பாராளுமன்ற குழுவில் எம்மால் 75 இற்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களை இணக்க முடிந்திருக்கிறது. உங்கள் ஆதரவு இருந்தால் பல நூறு பாராளுமன்ற உறுப்பினர்களை எமது தமிழர்களுக்கான சர்வ கட்சி பாராளுமன்ற குழுவில் இணைத்து விட முடியும்.

நீங்கள் தொடர்பாடலில் சிறந்த ஆற்றல் உள்ளவராகவும் மற்றவர்களை இணங்கவைக்கும் திறமை உள்ளவராகவும் இருந்தால் எம்முடன் இணைந்து பணியாற்றுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தொடர்பு : நடா வசி மின்னஞ்சல்: admin@tamilsforum.com தொ.பே: 020 8808 0465

## நிதி உதவி பெறுதல்



நிதிசேகரித்தல் என்பது மிகவும் முக்கியமான ஒரு செயற்பாடு. நிதி இன்றி எம்மால் எமது இலக்கு மற்றும் அபிலாஷைகளை நோக்கி முன்னகர்ந்து செல்ல முடியாது என்பதுடன் எமது பணிகளை விரிவுபடுத்தவும் முடியாது.

நீங்கள் நிதி சேகரிப்பதில் கைதேர்ந்தவராகவும் அது தொடர்பில் சிறந்த திட்டங்களையும் கொண்டவராக இருப்பின் தயவுசெய்து எம்முடன் இணைந்து செயற்படுங்கள்.

தொடர்பு: அருண் மின்னஞ்சல்:admin@tamilsforum.com
தொ.பே: 020 8808 0465

## அணிதிரட்டல்



நாம் ஒரு மக்கள் அமைப்பாக இருப்பதில் பெருமை அடைவதுடன் பொதுமக்கள் மற்றும் அமைப்புக்களின் சிறந்த பங்குபற்றல் மற்றும் ஈடுபாடு என்பவற்றிலேயே நாம் தங்கி இருக்கிறோம்.

தாயகத்தில் சிங்கள இனவெறி அரசாங்கத்தின் தொடர்ச்சியான அடக்கு முறைகளை தகர்த்தெறிந்து எமது விடுதலையை வென்றெடுப்பதற்காக புலம் பெயர் தமிழ் மக்கள் அணிதிரண்டு ஒரு மக்கள் இயக்கமாக செயற்படவேண்டிய தருணம் இது.

நல்ல தொடர்பாடல் ஆற்றலும் மற்றவர்களை இணக்கச்செய்யும் திறமையும் உள்ளவராகவும் நீங்கள் இருந்தால் எமது அங்கத்தவர் திரட்டும் குழுவிலோ அல்லது எமது உள்ளூர் தமிழர் பேரவைகளிலோ இணைந்து பணியாற்றலாம்.

தொடர்பு: இந்து குமார், சிவராசன், ரொபேட் மின்னஞ்சல்: admin@tamilsforum.com தொ.பே: 020 8808 0465



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி



சிறி லங்கா அரசின் இனவாத யுத்தத்தினால் மோசமாக பாதிக்கப்பட்டு தாயகத்தில் அல்லலுறும் எமது தமிழ் உறவுகளுக்கு உதவி செவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

பிரித்தானிய தமிழர் பேரவை பல்வேறு வழிகளில் இந்த பணிகளை செய்து வருகிறது. நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் நல்ல அனுபவமும் திறமையும் கொண்டவராக நீங்கள் இருந்தால் எம்முடன் இணைந்து தாயக உறவுகளுக்கு பணியாற்றுங்கள்.

தொடர்பு: குகன் மின்னஞ்சல்: admin@tamilsforum.com தொ.பே: 020 8808 0465

## நிகழ்வுகளும் நிகழ்சிகளும்



எமது விடுதலையை வென்றெடுக்கும் வகையில் கண்காட்சிகள், மகாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், நினைவுகூரல் நிகழ்வுகள், நிதிசேகரிப்பு இராப்போஷன நிகழ்வு என்று பல்வேறுபட்ட நிகழ்வுகளையும் நிகழ்ச்சிகளையும் நாம் நடாத்தி வருகிறோம். இத்தகைய நிகழ்வுகள் தொடர்பில் சிறந்த அனுபவம் மற்றும் ஒழுங்குபடுத்தும் ஆற்றல் உள்ளவராக இருந்தால் தயவுசெய்து நீங்கள் எம்முடன் இணைந்து செயற்படுமாறு அழைக்கிறோம்.

தொடர்பு: கிருபா மின்னஞ்சல்: admin@tamilsforum.com
தொ.பே: 020 8808 0465

## ஆய்வு



தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் விடுதலை, நீதி ஆகியவற்றுக்கான எந்தவொரு போராட்டத்திலும் அவை பற்றிய ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. தமிழ் தேசிய விடுதலை போராட்டம் தொடர்பில் நாம் ஏற்கனவே பல்வேறுபட்ட ஆய்வுகள் மற்றும் வெளியீடுகளை செய்திருக்கிறோம். ஆனால் இது போதாது. நாம் ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள் தொடர்பில் கூடிய நேரத்தையும் உழைப்பையும் செலவிட வேண்டும். இனவாத சிறி லங்கா அரசாங்கத்திற்கெதிரான எமது அரசியல் மற்றும் ராஜதந்திர யுத்தத்தில் அறிவும் கல்வியும் எமது சக்திமிக்க ஆயுதங்களாக இருக்கட்டும்.

எமது ஆய்வு குழுவில் இணைந்து பணியாற்றுவதற்கு ஆய்வுத் திறன், பகுப்பாய்வு திறன் மற்றும் எழுத்தாற்றல் திறன் உள்ளவர்களை தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தொடர்பு: நடா, ராஜ்குமார் மின்னஞ்சல்: admin@tamilsforum.com தொ.பே: 020 8808 0465

## பிரித்தானிய தமிழர் பேரவையில் உறுப்பினராக வேண்டுமா ?




எம்முடன் இணைத்து கொள்ள விரும்பினால் தயவுசெய்து உங்களது பெயர், முகவரி, மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை எமக்கு மின்னஞ்சல் செய்யுங்கள். நாம் உங்களுடன் தொடர்பு கொள்ளுவோம்.

எமது அலுவலகத்திற்கு நேரடியாகவும் நீங்கள் வருகை தரலாம். இரண்டு வகையான அங்கத்துவங்கள் இருக்கின்றன. 1.வருடாந்த அங்கத்துவம் (£10). 2.ஆயுட்கால அங்கத்துவம் (£100).

ஆயுட்கால அங்கத்துவமனது உங்களது ஆயுள் முழுவதற்கும் செல்லுபடியானதாக இருப்பதுடன் இலகுவான முறையுமாகும்.

## நன்கொடை




பிரித்தானிய தமிழர் பேரவையின் செயற்பாடுகளுக்காக நீங்கள் நன்கொடை வழங்குவதை மகிழ்வுடன் வரவேற்கிறோம். எம்மிடமுள்ள கொடுப்பனவு கட்டளை படிவத்தை ( Standing Order Form) வாங்கிப் பூர்த்திசெய்து அனுப்புவதன் மூலம் தவணை கட்டணம் அல்லது நன்கொடைகளை எங்களுக்கு அனுப்பி வைக்கலாம். கீழ்வரும் எமது வாங்கி கணக்கு விபரங்களை பயன்படுத்தி உங்களது இணைய வங்கி சேவை மூலம் நேரடியாகவும் நீங்கள் இதனை செய்யலாம்.

| | |
|---|---|
| Account Name | : Tamils Forum UK Limited |
| A/C Number | : 20 00 04 69 |
| Sort Code | : 09 01 28 |
| Bank Name | : Santander Bank, Bridle Rd, Bootle, Merseyside |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் யார்?

சர்வதேச அரசியல், இராஜதந்திர நடவடிக்கைகள் மற்றும்
பங்குபற்றுதல் ஆகியவற்றினூடாக தமிழீழ தாயகத்தில் தமிழ் மக்கள்
சமத்துவம், நீதி, விடுதலை மற்றும் சுயநிர்ணயம் ஆகியவற்றை
அடைவதற்காக பிரித்தானியாவில் செயற்பட்டு வரும் மக்கள் அமைப்பே
பிரித்தானிய தமிழர் பேரவை ஆகும்.

## எமது பணித்திட்டம் என்ன?

பேரவையின் உறுப்பினர்கள், நலன் விரும்பிகள்,
பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உலகம் பூராகவுமுள்ள
புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரதும்
திறமைகள் மற்றும் அறிவு ஆகியவற்றை பயன்படுத்துவதுடன் தாயகத்தில்
உள்ள மக்களின் துன்பங்களுக்கு ஒரு முடிவை காண்பதுடன் சர்வதேச சட்டம், ஒப்பந்தங்கள்
மற்றும் மரபுகளுக்கு இசைவான ஜனநாயக வரைமுறைகளுக்குள்ளாக
தாயகம்,தேசியம், தன்னாட்சி மற்றும் சுயநிர்ணயம் ஆகிய கோட்பாடுகளுக்கு அமைய
தமிழீழ தேசத்துக்காக பாடுபடுதல்.



பிரித்தானிய தமிழர் பேரவையின் செயற்பாடுகள் பற்றிய மேலதிக தகவல்கள்
வேண்டுமாயின் தயவு செய்து கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானிய தமிழர் பேரவை
Tamil House, Unit 1, Fountayne Business Centre, Broad Lane, Tottenham, London N15 4AG
Tel: +44 (0)208 808 0465, Email:admin@tamilsforum.com, Web: www.tamilsforum.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org